# தபோவனம்







19-20 ஆடி 2025 சிறுவர் நிகழ்வுகள்

# (19.7.2025) சனிக்கிழமை நிகழ்வுகள்

## ❖கடற்கரை சுத்திகரிப்பு பணி

காலை 9 – 9.30 எமது சிறுவர்களால் கடற்கரை சுத்திகரிப்பு பணி இடம் பெற்றது .





**கடல் மாசு** – தபோவன கடற்கரையில் ஒரு நாளில் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப் பொருட்கள்

## ❖ அரங்க செயற்பாடுகள்

காலை 9.30 -மாலை 12.30 யாழ்ப்பாண பல்கலைக்கழக நாடகமும் அரங்கக்கலைகளும் துறையின் விரிவுரையாளர் திருமதி. இ. தவச்செல்வி மற்றும் இத்துறையைச் சேர்ந்த நான்காம் வருட மாணவர்கள் தமது பிரயோக அரங்கச் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக தபோவன சிறுவர்களுக்கு அரங்க செயற்பாடு ஒன்றினை நிகழ்த்தினார்கள். சிறுவர்களிற்கான மகிழ்வளிப்பு (ஆடல், பாடல், விளையாட்டு), பார்வைகளினூடான கதை கூறல், மற்றும் கலந்துரையாடல் அரங்கு போன்றவற்றை உள்ளடக்கியதாக இருந்தது

### ❖ சிறுவர்களுடன் இணைந்த செயற்பாடுகள்

- ✓ "நரி வருது நரி வருது காக்கா காக்கா பறந்துவா" மற்றும் "கரடி மாமா கரடி மாமா எங்க போறீங்க" என்ற பாடல்களை பாடுதல் மற்றும் ஆடிநடித்துக் காட்டுதல்.
- ✓ பழைய பத்திரிகை கடதாசியில் தொப்பி செய்தல்.
- ✓ குழுக்களாக இணைந்து நாடகம் நடித்தல்.








## ❖ நீச்சல் பயிற்சி

காலை 11 – மாலை 1 சமுத்திரவியல் பல்கலைகழக பயிற்றுவிப்பாளர் திரு கிறிஸ்து ராஜா வால் வசதிபடுத்துனர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் சமுத்திரவியல் பல்கலைகழக மாணவர்களுக்கான நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டது. அதே நேரம் சிறுவர்களும் பல்கலைகழக மாணவர்களும் கடற்கரையில் விளையாடினார்கள்.








## ❖ சத்துணவு

சகலருக்கும் சத்துணவாக ஆடிக்கூழ் வழங்கப்பட்டது

### ஆடிக்கூழ்

சிவப்பு அரிசி மா
வறுத்த பயறு
நிலக்கடலை
உழுந்து மா
தேங்காய்ப்பால்
பனங்கட்டி
தேங்காய் துண்டுகள்







# (20.7.2025) ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள்

## ❖ பியானோ வகுப்புக்கள்

காலை 10 – 11 எமது தபோவன சிறுவர்களுக்கான பியானோ வகுப்புக்கள் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த நிசாலினி என்பவரால் பயிற்றுவிக்கப்பட்டது இதில் 10 – 22 வயதிற்குட்பட்ட 3 ஆர்வமுள்ள மாணவர்களே பங்குபற்றினர். ஏனைய மாணவர்கள் சில அர்ப்பணிப்புகள் காரணமாக வருகைதர முடியவில்லை. எனவே அடுத்த வகுப்பை மாலை வேளையில் வைக்க தீர்மானித்துள்ளோம்.

# நன்றி